ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

स्थिराः कृतज्ञा मधुरा हितैषिणः परात्मभूता यदि सर्वदेहिनः ।
समानचित्ताः स्युरजन्मने सतां ध्रुवं भवेन्नातिमहानिहोद्यमः ॥

புவியிலுள்ள ஸகல ப்ராணிகளும் பிறவிப்பிணியை நிவர்த்தித்துக்கொள்ள ஒரே உறுதியாயிருந்து அதற்காகவென்றே உபகரித்தவர் செய்த நன்றியை மறவாமல் நினைத்துக்கொண்டே இருப்பவர்களாகவும்; எவரைக்கண்டாலும் இனிமையாகப்பேசி, ஹிதத்தையே நாடுகின்றவர்களாகவும், பிறர்களையும் தன்னைப்போலவே நினைத்து ஸமானசித்தமுடையவர்களாகவும், இருப்பார்களேயானால் அந்தவிஷயத்தில் ஸாதுக்களுக்கு மிக அதிகமாக முயற்சி எடுத்துக்கொள்ளும்படி நேரிடமாட்டாது. பிறவிப்பிணியால் வாடி வதங்கி வருந்தும் பிராணிகளை ஸாதுக்கள் பார்த்துவிட்டால் எப்படியாவது அவர்களுடைய அந்தக் கஷ்டத்தை நிவர்த்திக்கப்பெரு முயற்சிசெய்வார்கள், அவர்களுடைய நிலைமைக்குத் தக்கபடி ஸாதனங்களை ஆராய்ந்துபார்த்து உபதேசிப்பார்கள், அவ்வுபதேசத்தைக் கேட்டவர்களுள் பக்குவ புத்தியுள்ள பாக்கியசாலிகளானால் அந்தவழியிலேயே உறுதியாய் நிற்பார்கள். எவ்விதத்திலும் மேல் பதவியை அடையப்படுபடுவார்களேயன்றி கீழ்பதவிக்குப் போய்விடும் பாபிகளாகமாட்டார்கள். மேல்பதவி கிடைத்தபோது இதற்குக்காரணமாயிருந்தவர்களிடம் நன்றிபாராட்டுவார்கள்; இப்படி நற்குணம்நிறைந்தவராகவே எவரிடத்திலும் மதுரபாஷிகளாயிருப்பார்கள். பிறர் நலத்தையே நாடிப்பேசுவதைவிடப் பிரியபாஷணம் வேறில்லை. ஆகையால் மதுரபாஷிகள் எல்லோருக்கும் ஹிதத்தையே விரும்பின வண்ணமேயிருப்பார்கள். பிறர்நலத்தைத் தேடும்பொழுது சுயநலம் சுயமாகவே சித்திக்கும். இதுதான் பெரியோர்கொண்டகருத்து. தற்காலத்திலோவெனில் பிராணனைக்கொடுத்து உதவிபுரிந்தாலும் உபகாரமாகவே நினைப்பதில்லை. தன்னைக்கெடுத்துவிடத்தான் இந்த வழி தேடினார்களேயன்றி நன்மைக்காக இல்லவேயில்லையென்று விபரீதமாக நினைப்பார்கள், அதிலும் வைதிகரிடத்தில் விசேஷமாகக் கருதுவார்கள். சுயநலத்திற்காக வைதிகரை விரட்டுவார்கள். இப்படி தற்காலத்தியவர்கொண்டுள்ள விபரீத உணர்ச்சியை மாற்றி, அவர்களுக்கு நல்லபுத்தியைப்புகட்ட, ஸாதுக்கள்ஸ்வல்ப முயற்சி எடுத்துக்கொண்டால் போதாது. பெரிய பிரயத்தினம் செய்தாலும் பயன்படுமோவென்று ஸந்தேஹப்படவேண்டிய நிலைமையில் அல்ப்ப ஸ்வல்பத்தால் கார்யம் நடைபெறாது. பிறரையும் தன்னைப்போல் பாவித்து ஒற்றுமைப்பட்ட புண்ணியவானிடம் பெருமுயற்சி சாதுக்களுக்கு வேண்டியதில்லை. ஆகையால் ஸர்வஜனங்களும்ஸாதுக்களுக்கு அதிக சிரமத்தை கொடுக்காமல் தங்களையே தாங்கள் திருத்திக்கொண்டு நல்வழிநாடி நலம் பெறுவார்வளாக. சுபம்.

பத்திராதிபர்

ஆர்ய தர்மம்.

ப்ரஜாபதி-ஸூ மாசி-மீ ௨௦-௨

உண்மையாய் உலகின்போக்கை அறிந்தவர் எவர்?

தற்காலத்திலாகட்டும், முற்காலத்திலாகட்டும், பிற்காலத்திலாகட்டும், எக்காலத்திலாகட்டும் உலகின் போக்கு எவ்விதமிருக்குமென்பதை உண்மையாயறிந்தவர் எவர்? என்று விமர்சம் செய்தால் தற்காலத்திய மேதாவிகள் தாங்கள்தான் அந்த விஷயத்தில் முன் நிற்பவர்களென்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி தன் மனதில் கர்வம்கொண்டிருப்பது யாருக்கும் ஸஹஜமாய் இருக்கலாம்.

उत्क्षिप्य टिट्टिभः पादा वास्ते भङ्गभयाद्दिवः ।
स्वचित्तकल्पितो गर्वः कस्य नात्रापि विद्यते ॥

"சிட்டுக்குருவி ஆகாயமிடிந்து விழுந்துவிடுமோவென்று பயந்து தன்னிரண்டு கால்களையும் மேலேதூக்கிவைத்துக்கொண்டிருக்குமாம். விழுந்துவிட்டால் காலால் தாங்கி தப்பித்துவிடலாமென்ற அகம்பாவமதற்கு. இது ஸஹஜந்தான். இவ் வுலகில் எவனுக்குத் தான் தானாகவே தன்மனதில் கற்பித்துக்கொண்டகர்வமில்லை. என்று நீதிநூலும் இதை ஸம்மதிக்கிறது. ஆனால் இப்படித் தன் மனதில்மாத்திரம் மனோராஜ்யம் கொண்டிருக்கலாமே அன்றி வேறில்லை. உண்மையான உலகப்போக்கு இந்த கர்வத்தால் தோன்றிவிடமாட்டாது. அப்படியிருக்கையில் இந்த வெட்கக்கேட்டை வெளிவிட்டுப் பத்திரிகைகளிலும் பிரசுரித்துவிடுகிறார்கள். தன் பெருமையைப் பிரகாசப்படுத்துவதோடுமாத்திரம் இவர்கள் நிற்பதில்லை. பிறருக்கு உலகின்போக்கே தெரியாதென்றும் சொல்லிவிடத் துணிந்துவிடுகிறார்கள். அதிலும் வைதிகர்களுக்குக் கொஞ்சம்கூடத் தெரியாதென்று கூசாமல் சொல்லிவிடுவார்கள். வைதிகர் சூழ்ச்சி என்று மகுடஞ்சூட்டி எழுதி வரும் உற்சாகத்தில் மஹரிஷிகளைக்கூட லக்ஷ்யம்செய்யமாட்டார்

கள். ஒருவர் "துறவுபூண்டு ஜனஸஞ்சாரமற்ற மலைகளுக்கு ஓடிப்போனவர்களும் ஜனங்களின் தேவைகளை அறியாதவர்களு மான மஹரிஷிகள் விதித்துள்ளசட்டங்கள் சிரஞ்சீவியாக இருக்க வேண்டுமென்று நான் நினைக்கவில்லை" என்று எழுதுகிறார். மஹரிஷிகள் என்றபெயரையும், அவர்கள் சிலசட்டங்களை விதித்தி ருக்கிறார்களென்றதையும், கேழ்க்கும் வரையில் அவகாசம் கிடைத்த அவருக்கு அவர்களுடைய மஹிமைகளை முற்றிலும் மனதில்வாங்கிக்கொள்ள அவகாசம் கிடைக்கவில்லையோ, அல் லது மனம்தான் ஸஹிக்கவில்லையோ தெரியல்லை. "ஜன ஸஞ்சார மற்ற மலைகளுக்கு ஓடிப்போனவர்கள்" என்று கூறியிருக்கிறார். அதிலொன்று விசாரிப்போம். ஜன ஸஞ்சாரமுள்ள இடத்தில் இருந்து ஜன ஸஞ்சாரமற்ற இடத்திற்கு ஓடிப்போனதாகச் சொல் வாரானால் அந்த மஹரிஷிகள் ஜனஸஞ்சாரமுள்ள இடத்திலிருந்த பொழுது ஜனங்களின் தேவைகளைத் தெரிந்துகொண்டிருப்பார் களே. அப்படியிருக்கையில் "அவர்கள் ஜனங்களின் தேவைகளை அறியாதவர்கள்" என்பது எப்படி பொருந்தும்? ஜனஸஞ்சாரம் உள்ள இடத்திலிருந்துங்கூட ஜனங்களின் தேவைகளைத் தெரிந் துகொள்ளவில்லையென்றால் இதற்குத் தகுந்தகாரணம் கூறவிடில் இதை ஒப்புவதெப்படி? இவர்கள் தெரிந்துகொண்டதுமாதிரி கூடவா அவர்கள் தெரிந்துகொண்டிருக்கமாட்டார்கள். ஆகவே அவர்கள் ஜனங்களின் தேவைகளை அறியாதவர்கள் என்பது வெறும்பேச்சு. ஜனஸஞ்சாரமற்றவிடத்திலிருந்து ஜனஸஞ்சாரம் அற்ற இடத்திற்கு ஓடினார்களென்பாரானால் இந்தக் கற்பனையின் பயன் என்னவோ தெரியவில்லை. ஓடுவதற்கு முந்தியிருந்த இட மும் ஜனஸஞ்சாரமற்ற இடந்தானே! அதைவிட்டு மற்றவிடம் ஓடினார்களென்று சொல்லுவதில் என்னபயனோ அதுவும் தெரிய வில்லை. ஒருவாறு ஜனஸஞ்சாரமற்ற இடத்திற்கு ஓடியிருந்தாலும் ஒருஸமயம் ஜனஸஞ்சாரமுள்ளவிடத்திற்கு அவர்கள் வந்திருக்கக் கூடாதா? அந்த ஸமயத்தில் ஜனங்களின் தேவைகளைத் தெரிந்து கொண்டிருக்கக்கூடாதா? மஹரிஷிகளின் பெயரையெழுதின இடத்தில் அவர்கள் ஜனங்களிடையே வந்தார்களென்றும், ஜனங் கள்படுங் கஷ்டத்தைக் கண்டு கருணைகொண்டு அதை விலக்கப் பெருமுயற்சிசெய்தும், ஜனங்களின் தேவைகளைத் தெரிந்து கொண்டு அதை அடைவிக்க உபாயங்களைப் போதித்தும், பேரு

த்விபுரிந்துவந்தார்களென்றும் கூறப்பட்டிருப்பதைக் கவனிக்கும் வரையில் மனது நிலைகொள்ளாமற்போனதற்குக் காரணம் தெரியவில்லை. அன்றியும்மஹரிஷிகள் ஜனங்கள்மத்தியில்வராவிட்டாலும், ஜனஸஞ்சாரமற்றவிடத்திலேயே வஸித்துவந்திருந்தாலும் ஸர்வஜ்ஞர்களானபடியால் இருந்தவிடத்திலிருந்தே திவ்ய திருஷ்டியால் ஜனங்களின் தேவைகளைத் தெரிந்துகொள்ளச் சக்திவாய்ந்தவர்களென்பதும் அவர்கள்பெயரை எழுதின ஏட்டில் எழுதப்பட்டிருக்கிறது. ஜனங்களின் தேவை மஹரிஷிகளுக்குத் தெரியாது என்று எழுதினவர் இந்த இரஹஸ்யத்தை எப்படித் தெரிந்துகொண்டாரோ? மஹரிஷிகள் இருக்குமிடஞ்சென்று தெரிந்துகொண்டாரா? அல்லது தானிருந்தவிடத்திலேயே தெரிந்துகொண்டுவிட்டாரா? மஹரிஷிகளிருக்குமிடத்தை ஜனஸஞ்சாரமற்றவிடமென்றல்லவா இவர் தீர்மானித்திருக்கிறார். அப்படி இருக்க இவர் சஞ்சரிக்கவருமிடத்தில் மஹரிஷிகள் வாஸம் செய்வார்களா? மஹரிஷிகள் இருக்குமிடம் போகாமலும், அவர்களைக் கண்ணாரப் பாராமலும், அவர்களது மஹிமையைப் புகட்டும் புண்ணியமான புராணக்கதைகளைப் பூராவாகப் பெரியோர்களிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொள்ளாமலும், எப்படி அவர்களின் ஸ்வபாவத்தையறிந்தாரோ? ஆச்சரியம்! காவ்யம் பயின்ற சிறுவர்களுமன்றோ மஹரிஷிகளின் மஹிமையையறிவார்கள். உலகின் போக்கையும், ஜனங்களின் தேவையையும் மஹரிஷிகள் தெரிந்துகொண்டிருக்கிறார்களென்று சிறுவரறியும்படி கவிகுலதிலகமென்று கீர்த்திபெற்ற ஸ்ரீகாளிதாஸ மஹாகவி சாகுந்தல நாடகத்தில்:—

पश्य वनौकसोऽपि सन्तो लोकज्ञा वयम् ।

“நாம் வனவாஸிகளாயினும் உலகத்தின் போக்கை அறிந்தவர்களே” என்று கண்ணுவ மஹரிஷி சொன்னதாகவும் **नखलु धीमतां कश्चिदविषयो नाम** “காலத்திரயத்தையும் கண்டறியும் புத்தி சக்தி வாய்ந்தவர்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லையன்றோ! என்று அதைச் சார்ங்கரவனென்ற சிஷ்யன் ஆமோதித்ததாகவும் எழுதியிருக்கிறார். **लोकज्ञाः** என்றதற்கு **स्थावरजङ्गमात्मक बहुविधज्ञाः** “ஸ்தாவர ஜங்கமவடிவமாகப் பலவிதப்பட்ட உலகின்போக்கையறிந்தவர்” என்று வியாக்யானம் செய்திருப்பதிலிருந்து—

"கொடி-செடி—மரம்—முதலிய ஸ்தாவர ஜந்துக்களின் போக்கை யும், தேவவையும் நன்ருய் தெரிந்துகொண்டவர்கள்" என்று ஏற்படுவதால் ஜனங்களின் தேவை அவர்களுக்குத்தெரியாதென் பது அறியாமையால் சொன்னதாகும். அத்தகைய மஹாத்து மாக்களான மஹரிஷிகளின்வம்சத்திற்பிறந்து அவர்களது சரித்தி ரத்தைப் பூராவாகப் பன்முறை படித்தும், கேட்டும் நன்ருகத் தெரிந்து கொண்ட வைதிகர்கள்தான் உலகின்போக்கை உண்மை யில் அறிந்தவர்களாவார்கள். அவர்கள் மீது மற்றவர் ஆக்ரோ சப்படுவதனுல்

सन्तस्तृणोत्सारणमुत्तमाङ्गात् सुवर्णकोट्यर्पणमामनन्ति ।
प्राणव्ययेनापि कृतोपकारः शेषाः परे वैरमिवोद्वहन्ति ॥

"தலையில் கிடக்கும் திருணத்தை எடுத்தெரிந்தால் கோடிப்பவுன் கொடுத்துதவிபுரிந்ததாக ஸாதுக்கள் நினைப்பார்கள். மற்றவர் களோவெனில் பிராணனைக்கொடுத்துப் பேருதவிபுரிந்தாலும் விரோதம் செய்ததாகவே நினைத்துத்வேஷப்படுவார்கள்." என்று நீதிநூல்க் கூறியதை ருஜுப்படுத்தினதாகுமேயன்றி ஒருபயனும் கிடைக்கமாட்டாது, ஆகவே மஹோபகாரம்செய்த மஹரிஷிகள் விதித்துள்ள சட்டங்களே உலகக்ஷேமத்திற்குக் காரணமாயுள் ளவை. அவை சிரஞ்சீவியாயிருப்பதை வேண்டாதவர் வார்த்தை வைதிகர்களுக்குத் தேவை இல்லை.

மனுஷ்ய ஸஹாயம் வைதிகர்கட்கு இருந்தாலும் இல்லாவிட் டாலும் தைவ ஸஹாயமும், ஈசுவரஸஹாயமுமுண்டென்பதில் கிஞ்சித்தேனும் சம்சயமில்லை. அப்படிப் பெரியோர் பேருதவி செய்வதைப் பெறக்கூடிய பாக்கியம்பெற்ற வைதிகர்கள் சென்ற வழியேசென்று எல்லோரும்க்ஷேமத்தையடைவாராக, சுபம்.

பத்திராதிபர்.

ஸ்ரீ ஸாயணபாஷ்யத்தின் நிலை,

வேதத்திற்கு பாஷ்யம் செய்வது ஸுலபமானதன்று வைதிக மதத்தின் ஸகல வித்யாஸ்தானங்களிலும் விசேஷ பாண் டித்யமும் வேதத்தினிடம் மிகுந்த விச்வாஸமும் உள்ளவர்களே

பாஷ்யம் செய்யமுடியும். மந்திர ப்ராஹ்மணங்கள் பரஸ்பரம் பல இடங்களில் வ்யாக்யான வ்யாக்யேய ரூபங்களாக அமைந்து இருப்பதால் ஆழ்ந்த அபிப்பிராயத்தை வெளியிட பலசாகை களின் பரிசயமும் வேண்டும்.

ஸ்ரீ ஸாயணாசார்யாளை எடுத்துக்கொண்டால் கீழ் சொல்லப் பட்ட ஸர்வக்ஞத்வமும், இதுபோன்றமற்ற விசேஷ குணங்க ளும் அவர்களிடம் ஒருங்கே அமைந்து இருந்தனவென்பது தெரியவரும். வேதார்த்தப் பிரகாசத்திற்கு அவச்யாபேக்ஷித குணங்களுடனேயே அவர்களுடைய பாஷ்யம் இருப்பதால் அன்றுமுதல் இன்றுவரை பூஜ்யர்களான பெரியோர்களால் அந்த வேதபாஷ்யம் கொண்டாடப்பட்டு வருகிறது. அதி கம்பீரமான வேதங்களின் அர்த்தங்களை தெளிவான நடையில் வெளியிடுவ தால் வேதபாஷ்யத்தின் மேன்மை எல்லோருக்கும் ஸுக்ஞாத மானதே.

ரிக்பாஷ்யத்தைக்கவனித்தால் பல பல அபூர்வ விஷயங்களை அறியலாம். "ஹாரித்ரவிகம் சாட்யாயநகம்" போன்ற சாகை கள் ஸாயணாசார்யாள் காலத்தில் பிரசாரத்திலிருந்தன என் பது வெளியாகிறது. ப்ராஹ்மணார்த்தங்களைக் கொண்டு மந்தி ரார்த்தம் வெளியிடப்படுமுறை விசேஷமாக அங்கு கையாளப் பட்டுள்ளது. அந்தந்த சாகைகளுக்கு அவச்யாபேக்ஷிதங்களான போதாயன, ஆபஸ்தம்ப, ஆச்வலாயன, லாட்யாயந, கௌசிகாதி களான ஸகல கல்ப ஸூத்ரங்களையும் அனுஸரித்தே ஸாயணா சார்யாளால் பாஷ்யம் செய்யப்படுகிறது.

வீணேன்? ஸகல விஷயங்களிலும் ஸாயணபாஷ்யம் உத் கிருஷ்டமானதாக இருப்பதால் வேதபுருஷன் ஸாயணரூபமாக அவதரித்தே வேதார்த்தத்தை வெளியிட்டான், என்றவாதமும் பொருத்தமுள்ளதே. மிகவும் சுருங்கச்சொல்லுங்கால் 13-வது நூற்றாண்டில் ஸாயணாசார்யாள் வைதிக மதத்திற்கு புத்துயிர் அளித்தார்கள் என்பதே தகுந்தது. அவர்கள்செய்த உபகாரத் திற்கு எத்துணை கோடி வர்ஷங்களானாலும் பிரத்யுபகாரம் செய்ய முடியாது.

அந்தோ! காலத்தின்கோலத்தை என்னென்று சொல்வது. அவரது பாஷ்யத்தின் இரண்டொரு வரிகள்வாசிக்க ஆரம்பித்த

உடன்ஸாயணுசார்யாளுடன் சண்டையிடஸந்நத்தமாகிவிடுகின்றனர். மேனாட்டாரில் சிலர் சாயணுசார்யாள், வெளியிடும் வேத புருஷ பாவத்தை அறியமாட்டாதவர்களாக சில இடங்களில் வேதபாஷ்யத்தைத் தூஷிக்கின்றனர். வைதிகமதத்தின் ரஹஸ்யத்தை லக்ஷியம்செய்யாமல் ஸ்வதந்திரமாக விமர்சம் செய்வதுடன் பரமார்த்தரங்கத்தை வெளியிடும் பாஷ்யத்தைக் குறைகூறியுள்ளனர்.

தயாநந்த சாஸ்வதிபோன்ற பலர், தங்களது புதிதானமதத்திற்கு பிரதிபந்தகமாகபாஷ்யம் இருப்பதைக்கொண்டு அவைமீது தப்பபிப்பிராயங்களை இஷ்டப்படி இட்டுக்கட்டி ஏறிடுகின்றனர்.

வைதிகர்களோ இதுவரை இவ்விதக் கூற்றுகளை கண்டிக்காமல் இருந்துவிட்டனர். இவ்விதக் கூற்றுகளை வைதிகர்கள் லக்ஷ்யம்செய்யவேண்டியதில்லை என்றாலும், இதனால் ஏமாந்தவர்கள் ஏராளமானவர்கள். வைதிகர்களும் லௌகிகர்களும் இதனால் பலர் ஏமாந்து ஆபாஸவழியில்பாஷ்யத்தைப் பரிஹஸிப்பதுடன் அவைகளின்மீது அவநம்பிக்கையும்கொண்டுவிட்டனர்.

வெகு ஸமீபகாலத்திலோ, தென்னாட்டிலும் சில நவீனர்கள் வேத பாஷ்ய விஷயமாக விபரீதமாக பிரசாரம் செய்வதுடன் பாஷ்யத்தைப் பரிஹஸித்தும் தூற்றுகின்றனர். 'வைதிகர்கள் இகழக்கூடிய விஷயங்கள் பாஷ்யத்திலுள்ளது' 'வேதபுருஷனது பாவம் அவர்கட்குத் தெரியா'தென்றதுபோன்ற துர்வாதங்களைக் கணக்கற்று வெளியிடுகின்றனர்.

இவ்வித வாதத்தை இலக்ஷ்யம் செய்யாமல் இருந்துவிடலாமானாலும், இன்னும் பாஷ்யவிஷயமான துரபிப்ராயம் பாமரர்களிடம் பாவிவிடுமென்பதையும் கவனிக்கவேண்டும். வைதிகர்கள் இதுவரையில் உதாஸீனர்களாக இருந்ததுபோல் இப்பொழுதும் இருந்தால் நம்மைவிட வைதிகமதத்திற்கு துரோகம் செய்தவர்கள் அகப்படார். வைதிகப் பூண்டு புவியிலிருக்கும்வரை வேதபாஷ்யத்திற்கு ஏற்படும் பரிபவத்தை ஸஹிக்கலாமோ? மிகுந்த பரிச்ரமப்பட்டு ஆயுள் முழுவதையும் வேதத்திற்கே அர்ப்பணம் செய்த அபூர்வ புருஷர்கள் அனியாயமாய்த் தூற்றப்படுவதை எவ்வளவுகாள் ஸஹிப்பது? இது உசிதமாகுமோ?

ஸாயண பாஷ்யம் தூஷிக்கப்படுங்கால் அதில் அத்யந்தம் ஔதாஸீந்யத்தை வஹிப்பது க்ருதஜ்ஞர்களுக்கழகன்று.

ஆகவே, பாஷ்யங்கள்மேல் மிகவும் ஸுலபமாகச் சொல்லப் படும் தூற்றல்களை அகற்றி உலகிற்கு ஸாயணபாஷ்ய பாவத்தை வெளியிடுவது அவச்யமான கடமை. பூர்வ பக்ஷிகளின் அட்ட ஹாஸங்களில் சிலவற்றையும், அதனல் ஏற்பட்ட சில கோலாஹங் களையும் யாம் அநுபவித்ததால் இதை எழுதலானேர். ஸமயம் நேர்ந்தால் அவர்களின் பூர்வபக்ஷங்களையும் வெளியிட்டு ஸாயண பாஷ்யபாவத்தையும் இங்கேயே வெளியிடுவோம்.

மேலும்—வேதபாடசாலைகளில் வேதபாஷ்யங்களை கட்டா யப்படிப்பாகவைத்து வேதபாஷ்யங்கள் உலகுள்ளவரையில் மறை யாமல் இருக்கும்படி செய்யவேண்டியதும் வைதிகர்களது புனிதக்கடமையே.

தா. ராமாநுஜதாதாசாரியார்.

ஸ்ரீ பஞ்சாக்ஷர மஹிமா.

நைமிசாரண்யவாஸிகள் ஓர் ஸமயம் ஸூதபுராணிகரைப் பார்த்து ஓ! முனிசிரேஷ்டரே! தாங்கள் முப்புரத்தை எரித்த ஈச்வரனுடைய, மந்திரத்தினுடையவும், விரதத்தினுடையவும், பூஜையினுடையவும், பக்தியினுடையவும், கதையினுடையவும், பெருமையை விளக்கவேண்டும் என்று பிரார்த்தித்தனர்.

உடனே ஸூதர் ஸந்தோஷத்துடன் ஈச்வர பக்தியில் உங்க ளுக்கு இவ்வளவு விச்வாஸம் ஜனித்தது பரம சிரேயஸ்ஸுக்குக் குக் காரணமாகும். ஆகையால் அதனுடைய லேசலேசத்தை வர்ணிக்கிறேன். அல்ப்ப ஆயுஸ் உள்ள நமக்கு விஸ்தாரமாகச் சொல்லவும் கேட்க்கவும் காலம்போதாது. புண்யமான ஸகல யக்ஞங்களிலும், ஜபயக்ஞமே சிறந்தது. தேவர்களுக்குள் சம் புவும், மந்திரங்களுக்குள் சைவஷடக்ஷரமும், உத்தமமானது. இதிலுள்ள ஒவ்வோர் எழுத்தின் மாஹாத்மியத்தையும் சொல்வ தற்கு நான்முகனும் போதுமானவரல்ல. ஸகல வேதங்களும் முடிவடைந்தது இந்த மந்திரத்திலேயே. ஸர்வ உபநிஷத்தின்

தாத்பர்யமான மந்திரத்தினால்முன்பு முனிகள் முக்தியடைந்தனர்.
ஸம்ஸாரத்தில் கட்டுப்பட்டு கஷ்டப்படும் ஜீவர்களிடத்தில் கருணை
கொண்டு ஈச்வரன் தன் வாக்கினால் பஞ்சாக்ஷரத்தை பிரணவத்
தோடு கூறினார். எந்த மனிதனுடைய ஹிருதயத்தில் பஞ்சாக்ஷரம்
புகுந்திருக்கிறதோ அவருக்கு மற்ற மந்திரங்களினாலும், யக்ஞங்
களினாலும், தீர்த்தங்களினாலும், தபஸ்ஸுகளினாலும், என்ன ஆக
வேண்டும்? வேதாந்த சிரோ பூஷணமாயும், மந்திரங்களுக்கு
மஹாராஜாவாயுமுள்ள சைவஷடக்ஷரத்தை உச்சரிக்காதவரை
தேஹமெடுத்தவன் துக்கமும், வியாதியும், வியஸனமுமுள்ள ஸம்
ஸாரத்தில் சுழலுகிறான். மோக்ஷமார்க்கத்துக்கு தீபம் போன்றது.
அக்ஞானக்கடலுக்கு படபாமுகாக்னி. மகா பாபங்களுக்குக்
காட்டுத்தீயாகும். பிரணவத்துடன் ஆறு அக்ஷரங்களும், பிரணவ
மில்லாமல் ஐந்தக்ஷரங்களுமாகும். இதற்கு கால, தேச, ஹோம
தர்ப்பணங்களில்லை. எப்பொழுதும் சுத்தமான மந்த்ரம். ஆன
தால் ஸத்குருவினிடத்தில் உபதேசம் பெற்று, புண்யக்ஷேத்திரத்
தில் ஜபித்தால் ஸித்தியளிக்கும். இது விஷயமான ஓர் பழமை
யான கதையைச் சொல்லுகிறேன். அதை ஒருதடவை
கேட்டாலும் மங்களத்தைக்கொடுக்கும். பலதடவை கேட்
பவர்கள் நித்யஸுகம் பெறுகிறார்கள்.

மதுரா நகரத்தில் தாசார்ஹனென்ற ஓர் அரசன் உண்டு.
அவன் காசிராஜகுமாரியான கலாவதியை கல்யாணம் செய்து
கொண்டான். தன் நகரத்தை அடைந்து ராத்திரி சயனகிருஹத்
தில் அழைத்தான். நாயகனால் பலதடவை வேண்டியும் அவன்
இடத்தில் பிரியப்படாமலும் அவனை அணுகாமலும் இருந்தாள்.
அப்பொழுது ராஜா பலாத்காரமாக அடைவதற்காக தன் இடத்
திலிருந்து கிளம்பினான். அரசியும் ஓ நாத! என்னைத் தொடா
தீர்கள். நான் விருதத்திலிருக்கிறேன். தர்மா தர்மங்களைத்
தாங்கள் அறிவீர்கள். பிரியத்துடன் அளிக்கப்பட்ட அன்னமே
புஜிப்பவர்களுக்கு ருசியாயிருக்கும். சதிபதிகள் இருவருக்கும்
பிரியமிருந்து ஏற்படும் சேர்க்கையே ஸுகமானது. இஷ்ட
மில்லாத ஸ்திரீகளின் போகத்தால் என்ன பிரயோஜனம்? பிரீதி
இல்லாதவளையும் ரோக முள்ளவளையும், கர்ப்பவதியையும்,
வீட்டுக்காகாதவளையும், விருதமுள்ளவளையும், விருப்பமில்லாத
வளையும் எந்த புருஷன் ரமிப்பான். யுவதியினிடமும், புஷ்பத்

தினிடமும், பயனை விரும்புகிறவன், தயையோடும், மிருதுவாயும், கொண்டாடுதலோடும், ரஸமாயும், பிரீதியோடும்இருக்கவேண்டும் என்று சொல்லியும் கேளாமல் காமாந்தனாய்ப்பிடிவாதமாகஅவளை இழுத்துக் கைகளால்கட்டி அணைத்தான். ஸுகத்தை விரும்பின அரசன் பழுக்கக் காய்ச்சின இரும்புபோன்ற அவள் சரீரத்தால் கொளுத்தப்பட்டவன்போல் அவளைவிட்டு விலகினான். ஆ என்ன ஆச்சரியம்! இளந்தளிர்போன்ற உனது சரீரம் ஏன் அக்னிபோல் தகிக்கின்றதே? எனக்கு பயமாகவும் வியப்பாயும் இருக்கின்றது. என்று அரசன் சொல்வதைக்கேட்டு காசிராஜ குமாரியும், நாத! எனது இளமைப்பருவத்திலேயே துர்வாஸமுனி எனக்குப்பஞ்சாக்ஷரத்தை உபதேசித்திருக்கிறார். அதன் பிரபாவத்தால் பாபத்தினின்றும் விடுபட்ட என் சரீரம், பஞ்சாக்ஷரஜபமில்லாத புருஷர்களால் தொடமுடியாது. கர்வ அகங்காரங்களுள்ள தங்களால், வேசிகளும், தனிப்பெண்களும், மது, மாம்ஸ பக்ஷகர்களாயிருப்பவர்களுமானஸ்திரீகளும் எப்பொழுதும் ஸேவிக்கப்படுகிறார்கள். சிவாராதனமும், சிவத்தியானமும், சிவமந்திர ஜபமுமில்லாத தங்களால் என்னை எப்படி ஸ்பர்சிக்கமுடியும்? என்றாள்.

மான்கணைகளால் துளைக்கப்பட்ட மனதுள்ள மகிபன் மதி ஈனத்தால் தன் மனைவியைப் பார்த்து அந்த மந்திரத்தை எனக்கு உபதேசம்செய் அதனால் பாபம் நீங்கி உன்னோடு ரமிக்கிறேன் என்க, ராஜபத்னியானவள் அரசனே? "தாங்கள் எனக்கு குரு அல்லவா? தங்களுக்கு நான் உபதேசம்செய்யக்கூடாது. நமது குலகுருவான கர்கரிடத்தில் உபதேசம்பெற்றுக்கொள்ளுங்கள்" என்றுசொல்லி இருவரும் கர்க்கரிடத்தில்போய் அரசன் குருவை வேண்டினான். கருணாமூர்த்தியான குருவும் யமுனைக்கரையில் புண்ணிய விருக்ஷத்தினடியில் ஸ்நாநத்தினாலும், உபவாஸத்தாலும் சுத்தனான அரசனைக்கிழக்குமுகமாய்உட்காரவைத்து, சிவபதங்களை நமஸ்கரித்து ராஜாவின் சிரஸ்ஸில் தன் கரத்தைவைத்து சிவரூபமான மந்திரத்தைஉபதேசித்தார். குருவினுடையஸ்பர்சத்தினாலும் மந்திரதாரணத்தினாலும், அரசன் சரீரத்திலிருந்து நூறு கோடிக் கணக்குகளான காக்கைகள் வெளிக்கிளம்பின. அக் காக்கைகளும் இரகுகள் கொளுத்தப்பட்டு, கரைந்துகொண்டு, பூமியில், புரண்டுகொண்டு, சாம்பலாய்க்கிடந்தன. அதைக்கண்ணுற்ற ராஜ தம்பதி ஆச்சரியத்துடன், மஹரிஷியே? சரீரத்திலிருந்து காக்கை

கள் எவ்விதம் உண்டாயிற்று? புறப்பட்ட காக்கைகளும் ஏன் நாசமடைந்தன? அதை நன்கு விஸ்தரிக்கவேண்டும் எனவே, கர்க்கரும் ராஜாவே! நீ இதற்குமுன் எடுத்த ஆயிரக்கணக்கான ஜன்மங்களில் செய்யப்பட்ட பாவங்கள் அநேகங்கள் உண்டு. புண்யங்களும் பல உண்டு. புண்யத்தால் மனிதஜன்மாவையும், பாபத்தினால் பாவஜன்மாவையும் அடைகிறாய். பாபமும்புண்யமும் இல்லாமல் இருக்கும்போது முக்திஉண்டாகிறது. சிவ பஞ்சாக்ஷரம் உன் ஹிருதயத்தில் பிரவேசித்ததும் அங்கு குடிகொண்டிருந்த பாபக்கோடிகள் காக்கைகளாக வெளிக்கிளம்பிவிட்டன, கோடிக்கணக்கான பிரும்மஹத்திகளும், சோக்கூடாதாரைச் சேர்ந்த பாபங்களும், கணக்கற்ற பஞ்சமஹா பாபக்கூட்டங்களும்பஞ்சாக்ஷரமந்த்ரத்தைத்தரிப்பதால் சாம்பலாய்விடுகின்றன. ஆகையால் உன்முற்பிறவித்தீயவினைகள்இப்பொழுது பொசுக்கப்பட்டன.சுத்தனாய்விட்டபடியால் முன்பே சுத்தமாயிருக்கிறஇந்த ராஜகன்னிகையுடன் இஷ்டபோகங்களை அநுபவிப்பாயாக என்று ஆசீர்வாதம்செய்து அவ்விருவர்களுடன் தன்வீட்டையடைந்து ராஜாவுக்கு விடைகொடுத்தனுப்பினார். தோஷமற்ற அரசனும் தன் பத்னியும் அரண்மனையையடைந்து நித்ய தரித்திரன் நவநிதியையும் அடைந்ததுபோல் மேலான ஸுகத்தை அநுபவித்தான். முனிவர்களே ஸகல வேத, சாஸ்திர, புராண, உபநிஷத்துக்களுக்கு சிரோபூஷணமானதும், பாபங்களைப் போக்குவதில் வல்லமையுள்ளதுமான பஞ்சாக்ஷர மகிமையின் சுருக்கத்தைக் கூறினேன் என்றார் ஸூதர். பெரியோர்களாலும் பஞ்சாக்ஷர மஹிமை

अगस्त्यरामादिभिरादृतत्वात् अमुष्य मन्त्रस्य च वैदिकत्वात् ।
परस्य तत्वस्य च प्रापकत्वात् नमश्शिवायेति सदा जपध्वम् ॥

அகஸ்தியர், ராமன் முதலானவர்களால் அநுஸந்தானம் செய்யப்பட்டிருப்பதாலும், இந்த மந்திரம் வேதத்தில் கிருஷ்ணயஜுர் வேதம் நாலாங்காண்டம் ஐந்தாவது பிரச்னம் எட்டாவது அநுவாகத்தின் நடுவில் நடுநாயகமணியாகக் கூறப்பட்டிருப்பதாலும், பரதத்வத்தை அடைவிப்பதாலும் பஞ்சாக்ஷரத்தை எப்பொழுதும் ஜபிக்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்றது. அதை ஜபித்து யாவரும் சிரேயஸ்ஸையடைவார்களாக. சுபம்.

கிருஷ்யக்ஞ. வீ. உமாமகேச்வர சாஸ்திரீ.

அஷ்டகா சிராத்தம்.

ஆஸ்திகர்களான உத்தமர்கள் செய்துவரும் (96) ஷண்ணவதி சிராத்தங்களில் மேற்கண்ட அஷ்டகைகள் 12. ஸப்தமீ அஷ்டமீ, நவமீ இந்த மூன்று திதிகளிலும், பிதுர்க்களை உத்தேசித்துச் சிராத்தம் செய்யவேண்டியது. இது சரீர ஸம்ஸ்கார ரூபமான ஏழு பாகயக்ஞங்களில் ஒன்றாகும். இதற்கு நான்கு மாதம் காலமாக கூறப்பட்டிருக்கிறது. சௌனகர்—

हेमन्तशिशिरयोश्चतुर्णामपरपक्षाणां अष्टमीष्वष्टकाः ।

ஹேமந்த சிசிருதுவினுடைய நான்கு கிருஷ்ணாஷ்டமிகளில் செய்யவேண்டுமென்றார். காலாதர்சத்திலே

मार्गशीर्षे च पौषे च माघे प्रौष्ठे च फाल्गुने ।

என்று புரட்டாசி மாதத்தையும் சேர்த்துச் சொல்லியிருப்பதால் இதில் ஏதாவது ஒருமாதத்தைக் குறைக்கவேண்டிய அவச்யம் வருகிறது. ஏனெனில் 12க்குமேல் அதிகப்படுத்துவதற்கு ஷண்ணவதி சிராத்தம் ஒப்பாது. ஆபஸ்தம்பர், போதாயனர் இருவருடைய கிருஹ்ய ஸூத்திரத்தால் மாக கிருஷ்ணாஷ்டமீ விசேஷித்து கூறப்பட்டிருக்கிறது. அதனுடைய ஸாஹசர்யத்தால் முன்னும் பின்னுமுள்ள, மார்க்கசீர்ஷ, பௌஷ, பால்குனங்களே பாக்கியுள்ள அஷ்டகைகளுக்குரித்தானதாகிறது ஆச்வலாயனர்.

हेमन्तशिशिरत्वोंस्तु चतुर्णामपि सत्तमैः ।
समर्थैरष्टकाः कार्याः कृष्णानामष्टमीषु च ॥

என்று முன்சொன்ன சௌனகர்வசனத்தையே பின்பற்றுகிறார்,

ஆச்வலாயனஸ்மிருதியில் **प्रोष्ठपन्माघमासयोः** என்றிருப்பதால் புரட்டாசியீ பிதிருமாஸமாகையால் அப்பொழுது மகாளய பக்ஷ காலமாயிருப்பதால் மகாளயத்தாலே சரிதார்த்தமாய் விடுகிறது. மார்க்கசீர்ஷம் முதலான நான்கு மாதங்களுமே அஷ்டகைக்கு உரித்தானதாகும். இஷ்டாசாரமும் அவ்விதமே இருக்கின்றது. ஆபஸ்தம்பர், மாககிருஷ்ணாஷ்டமியை விசேஷித்துக் கூறினது அபூபஹோமம் என்னும் **औपकार्य** உபகாரமாய் செய்யப்படும்

கார்யம் செய்வதற்காகவும் மற்ற அஷ்டகைகளில் அபூபஹோமம் இல்லை என்பதற்காக சொல்லவந்தாரே தவிற வேறு அஷ்டகை அன்வஷ்டகைகளைத் தள்ளுவதற்காகவல்ல. எட்டு பிராம்மணர்களைப் பூஜித்து அன்னமிடுவதால் அஷ்டகை என்றுபெயரமைந்தது.

पितरो यत्र पूज्यन्ते तत्र मातामहा अपि ।

"தன் பிதா முதலானவர்களை பூஜிக்குமிடத்தில் தன்தாயின் பிதா முதலானவர்களையும் பூஜிக்கவேண்டு" மென்றிருப்பதால் தன் இருவர்க்க பிதுர்க்களையும் உத்தேசித்தே செய்யவேண்டுமென்பது ஆண்டபிள்ளை கிருஹ்யவிருத்தியின் தாத்பர்யம். ஸப்தமீ தினத்தில் செய்யவேண்டியதை வாயாரச் சொல்லவில்லை. ஆயினும் திஸ்ரோஷ்டகா: மூன்று அஷ்டைகள் என்பதால், பூர்வாஷ்டகா, அஷ்டகா, அன்வஷ்டகா, என்றே சொல்வது பொருந்தும். மாசிமாதம் செய்வதில் பூர்வாஷ்டகா, மத்யாஷ்டகா ஸ்தானங்களில் दध्यंजलि ஹோமத்தை பதிலாக விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த அஷ்டகா சிராத்தத்தை பெரும்பாலும், மாகமாதத்திலேதான் அஷ்டமீ நவமி திதிகளில் செய்கின்றனர். புத்ரப்பிரதிபந்தகத்திற்கு அஷ்டகைசெய்யாதிருத்தலும் காரணமாக கர்மவிபாகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மத்யாஷ்டகையில் பிண்டதானமில்லை என்பது ஒரு சார்பார் சொல்லாகும், அப்படியிருந்தால்கர்த்தாவுக்கு போஜனமில்லை. பஞ்சமஹாயக்ஞமுமில்லை. ஏகாஷ்டகையில் அவச்யம் பிண்டதானம்செய்யவேண்டும். மறுநாள் அன்வஷ்டகை செய்யவேண்டும். சுபம்.

கிருஹ்யக்ஞ வீ உமாமகேச்வர சாஸ்திரி.

சிந்தித்தபயனைச் சாதிக்கும் சாதனம் சிராத்தம்.

பிராணிகள் எந்தெந்தபயனை அடையவிரும்பினும், அதை எல்லாவற்றையும் ஸாதித்துக்கொள்ள அவரவர்களுக்குத் தக்கவாறு ஸாதனங்கள் பல விதங்களாக சாஸ்திரங்களில் போதிக்கப்படுகின்றன. அவற்றுள் சிராத்தமென்பது சிறந்த ஸாதனமாகும். அதனுல் ஸகல பலன்களையும் அடையலாம். அங்ஙனமே யாக்ஞவல்க்கியர்—

स्वर्गं ह्यपत्यमोजश्च शौर्यं क्षेत्रं बलं तथा ।
पुत्रान् श्रैष्ठ्यं च सौभाग्यं समृद्धिं मुख्यतां शुभम् ॥
प्रवृत्त चक्रतां चैव वाणिज्यप्रभृतीनपि ।
अरोगित्वं यशो वीतशोकतां परमां गतिम् ॥
धनं वेदान् भिषक्सिद्धिं कुप्यं गामप्यजाविकम् ।
अश्वानायुश्च विधिवत् यः श्राद्धं संप्रयच्छति ॥

"எவன் விதிப்படி சிராத்தங்களைச் செய்வானோ அவன் ஸுவர்க்க சுகம், ஸந்தானம், ஸத்புத்திரன், சக்தி, சௌர்யம், க்ஷேத்திரம், (வயல்) புத்தி, பலம், சிரேஷ்டத்தனம், அழகு, நிரைந்ததனம்-தலைவனாயிருப்பது- சுபசோபனாதிகள்- தங்குதடையில்லாத ஆக்ஞை-வியாபாரம் முதலியன, ஆரோக்கியம், நல்ல கீர்த்தி, சோகமின்மை, மேன்மையானகதி, தனம், வேதவித்யை, வைத்தியஸித்தி, தாம்பிரம்முதலிய லோஹங்கள், பசுக்கள், வெள்ளாடு, செம்மரியாடு, குதிரை, பூர்ணாயுஸ் இவைகளையெல்லாம் அடைகிறான்" என்று கூறுகின்றார். கஷ்டப்பட்டு ஜீவனம்செய்பவனும் சிராத்தத்தைச் செய்யாமலிருக்ககூடாது. மாதாபிதாக்களுக்குப் பிரத்யாப்திக சிராத்தம் செய்வதோடு தொண்ணூற்றுஆறு சிராத்தங்கள் செய்யப்படவேண்டுமென்று சொல்லப்படுகிறது. அவையாவன—

अमा पातश्च संक्रान्ति स्तथा वैधृतिरेव च ।
अष्टकाश्चैव मन्वादि र्युगादिश्च महालयः ॥

"அமாசிராத்தம், வியதீபாத சிராத்தம், ஸங்கிராந்தி சிராத்தம், வைதிருதி சிராத்தம், அஷ்டகா சிராத்தம், மன்வாதி சிராத்தம், யுகாதி சிராத்தம், மஹாளய சிராத்தம்" இவைகளாம். ஒரு வருஷத்தில் 12- அல்லது 13- அமாவாஸ்யைகள்வரும். இது போல் ஸங்கிராந்திகள்-12, அஷ்டகைகள்-12, மன்வாதிகள்-14, யுகாதிகள்-4, மஹாளயம்-15, வியதீபாதம்-14, அல்லது-15, வைதிருதி-14, அல்லது-15, வரும். இவை வருங்காலங்களை ஸ்மிருதிகளில் கூறப்படுவதையனுஸரித்து பஞ்சாங்கங்களில் போடுகிறார்கள். இவைகளைத் தெரிந்துகொண்டு ஸம்பவித்தவரை அநுகல்ப்பமாயாவது அந்த காலங்களில் சிராத்தம் செய்யவேண்டியது அவசியம்- அவற்றுள் அஷ்டகா சிராத்தம் மிக அவசியம்.

அதைச் செய்யாவிடில் பிராயச்சித்தியாய்விடுவான். அங்ஙனமே பிதாமஹர்—

अमावास्याः व्यतीपातः पौर्णमास्यष्टकासु च ।
विद्वान् श्राद्धमकुर्वाणः प्रायश्चित्तीयते हि सः ॥

"அமாவஸ்யை, வ்யதீபாதம், மன்வாதி, அஷ்டகை இந்த காலங்களில் சிராத்தம் செய்யாதவன் பிராயச்சித்தியாய்விடுவான்" என்று கூறுகின்றார். அஷ்டகா சிராத்தம்-12-ம் மார்க்கசீர்ஷம், பௌஷம், மாகம், பால்குனம் இந்த நான்குமாதங்களில் வரும் கிருஷ்ணபக்ஷம், ஸப்தமீ, அஷ்டமீ, நவமீ, இந்ததிதிகளில் செய்ய வேண்டியது. அன்னரூபமாக செய்வதுதான் முக்கியம். முக்கிய கல்ப்பமாகச் செய்ய சௌகரியமில்லாவிட்டாலும் அநு கல்ப்பத்தையாவது செய்ய வேண்டும். அங்ஙனமே ஆசுவலாயனரால்—

अप्यनडुहो यवसमाहरेत् । अग्निना वा कक्षमुपोषेत् । एषाऽष्टकेति । नत्वेवानष्टकः स्यात् ॥

"அஷ்டகா காலத்தில் காளைமாட்டுக்குப் புல்லையாவது கொடுக்க வேண்டும். அல்லது புதருயுள்ளவிடத்தை நெருப்பால் கொளுத்தவேண்டும். இப்படியாவது அஷ்டகைக்குப் பிரதிநிதியைச் செய்யவேண்டுமேயன்றி அஷ்டகையைச் செய்யாமலிருக்கக் கூடாது என்றும், வேறிடத்தில்—

अपि वाऽनूचानेभ्य उदकुम्भमाहरेत् अपि वा श्राद्धमन्त्रानधीयीत ।
नत्वे वानष्टकः स्यात् ।

"பிரவசனம் செய்யச் சக்திவாய்ந்த பிராமணர்களுக்கு ஜல கும்பத்தையாவது கொடுக்கவேண்டும். அல்லது சிராத்த மந்திரங்களையாவது ஜபிக்கவேண்டும். அஷ்டகையில்லாமலிருக்கக்கூடாது, என்றும், ஆசுவலாயன ஸ்மிருதியில்—

तिलोदकं प्रदातव्यं निर्धनेनाति भक्तितः ।
अष्टकाश्राद्धसिद्ध्यर्थम् ।

"அஷ்டகா சிராத்தபலன் ஸித்திக்கவேண்டுமானல் பணமில்லாதவனுயிருந்தாலும், பக்தியுடன் திலோதகத்தையாவது கொடுக்க

வேண்டும்" என்றும் கூறப்பட்டது. அஷ்டகைசெய்யாவிடில் மிக தோஷமுண்டு.

अष्टकां ये न कुर्वन्ति स्वशक्त्या मासयोस्तयोः ।
अन्त्यायां मध्यमायां वाऽसिताष्टम्यां यतात्मना ॥
ते विरूपा दारिद्राश्च भविष्यन्ति भवे भवे ॥

"அந்த நான்குமாதங்களில் நடுவிலாவது கடைசியிலாவது கிருஷ்ணாஷ்டமீயில் நியமத்துடன் சக்திக்கேற்றவாறு அஷ்டகையைச் செய்யாதவர்கள் பிறவிதோறும் குரூபிகளாயும், தரித்திரர்களாயுமாவார்கள்" என்று ஸ்மிருதிகளில் கூறப்படுகின்றது. பிதா மரித்த ஒரு வருஷத்திற்குள் அமாஸங்கிராந்தியாதி சிராத்தங்களைச் செய்யாவிடினும் அஷ்டகையைச் செய்வதில் யாதொருதடையும் இல்லையென்று **अष्टका न विहन्यते** என்பதாதிவசனங்களால் விதிக்கப்படுவதால் அஷ்டகை அவசியம்செய்யவேண்டியதாகும். இப்படி அவசியமான காரியத்திலும் அனுஷ்டானமதிகமாயில்லாமற் போய்விட்டது காலவித்தியாஸத்தாலாம். அதனால் சிலராவது அனுஷ்டிப்பதாயிருந்தால் அனேக ஆசங்கைகள் உண்டாகின்றன. தர்மசாஸ்திரம் தெரிந்த மஹான்களும் குறைந்துகொண்டே வருவதாலும், சங்கைக்கு ஸமாதானம் சரியாய் வருவதில்லை. ஆயினும் பெரியோர்கள் அந்த விஷயத்தை நன்றாய் பாமர்சித்து நிர்ணயம்செய்து ஆர்யதர்மமூலமாக வெளியிட வேண்டுகிறோம்.

சுப்பரமணியன்.

உ

குருப்யோ நம:

மான்டூகோபநிஷதம்.

பிரியவாசகர்களே!

இது தங்களுக்கு அபூர்வமானதாகவே தோன்றும். ஆனால் அப்படி இல்லை. வெகு.ப்ரசித்தமானதேயாகும். மும்மதஸ்தர்களுமொப்புக்கொண்ட (10) உபனிஷதங்களுக்குள் இதுவும் ஒன்று. இதைத்தான் "மாண்டூக்யம்" என்று வழங்கிவருகிறோம்.

மாண்டுக்யத்தை மாண்டுகமென்று ஆனந்ததீர்த்தாசாரியாள் மாற்றிவிட்டார். அப்படி மாற்றவேண்டியகாரணத்தை அவரிப் போது இருந்தால் கேட்டுத்தெரிந்துகொள்ளலாம். அவர் தமது பாஷ்யத்தில் கூறிய காரணம் மாண்டுக்யம் என்ற பெயரிலும் பொருந்தும். ஆனந்த தீர்த்தாசார்யாள் தமது பாஷ்யத்தில் "மண்டுக (தவளை) வடிவனான வருணனால் இவ்வுபனிஷதம் கண்டு பிடிக்கப்பட்டதால், இதற்கு "மாண்டுகோபனிஷதம்" என்று பெயர்வந்தது என்று "பாத்மம்" "ஹரிவம்சம்" முதலிய கற்பித புராணவசனங்களை ஆதாரமாக எடுத்துக் காட்டியிருக்கிறார். மண்டுகத்தால் (தவளை) யால் கண்டுபிடிக்கப்பட்டது என்று அர்த்தத்தில் மாண்டுகமென்று வியாகரண சாஸ்திரப் பிரகாரமாக ஸித்திக்குமேயானால், அதே அர்த்தத்தில் "மாண்டுக்யம்" என்று மேன் ஸித்திக்காதோ? இப்படியிருக்கஎதற்காக வீணில் பெயரை மாற்றவேண்டும். இதனால், தமது அபிநிவேசமோ, துவேஷமோ இதுதான் வெளியாகும். உபனிஷத்துக்களின் நாமங்களுக் கெல்லாம். அவயவார்த்தம் அவசியமாகக் கூறவேண்டியது என்பதுமில்லை.

தவிர. பூர்ணப் பிரக்ஞாசாரியாள் இவ்வுபனிஷத் ஆரம் பத்தில், ஓங்கார சப்தார்த்தம்கூறியிருப்பதும், வெகு அபூர்வமாக இருக்கிறது.

ओतमस्व जगद्यस्मा दों तस्माद्भगवान् हरिः ।

"இப் பிரபஞ்சமெல்லாம் விஷ்ணுவினிடத்தில் ஓதமாயிருப்பதால், விஷ்ணுதான் ஓங்காரார்த்தம்" என்று பிருஹத் ஸம்ஹிதையில் சொல்லியிருப்பதாக எடுத்துக் காட்டியிருக்கிறார். இப்படி அர்த்தங் கற்பிப்பது மூலவிருத்தமாகும், மூலத்தில் அக்ஷா விபாகம், பாதபேதம். மாத்ராபேதம் ஸ்பஷ்டமாய் சொல்லப் பட்டிருக்கும்போது அவற்றையெல்லாம் கவனியாமல், எப்படி விருத்தார்த்தங் கற்பிக்கலாம். கடம் ப்ரச்னம், முதலிய உபனிஷதங்களிலுங்கூட அகார உகார மகார வடிவமாக ஓங்காரத்தைப் பிரித்து அது பராபரப் பிரும்மரூபமென்றுதான் சொல்லியிருக்கின்றதே யன்றி, இவர் கூறிய ஓதமென்ற ஓங்கார வியாக்யானம் சொல்லப்படவில்லை, இவ் வியாக்யானத்திற்கு வியாகரண சாஸ்திரமும் இடங்கொடுக்கவில்லை. இவ்விஷயம் 'மத்வமத வித்வம்ஸனம்" என்ற கிரந்தத்தில் விசதம்.

தவிர இவர் விச்வன், தைஜஸன், பிராக்ஞன், என்ற மூன்று ரூபமாக, தேஹத்தில் விஷ்ணுவை உபாஸிக்கவேண்டுமென்று இவ் வுபநிஷத் பாஷ்யத்தில் சொல்லியிருக்கிறார். பிரும்மஸூத்திர பாஷ்யத்திலோ, மஹாவிஷ்ணுவை உபாஸிக்கவேகூடாது. உபாஸிக்கவும் முடியாது. ஆனால் அம் மஹாவிஷ்ணுவின் பிரதிபிம்பத்தைத்தான் உபாஸிக்கக்கூடும் என்று ஸித்தாந்தஞ்செய்திருக்கிறார். ஆகவே பிரும்மஸூத்திர பாஷ்யத்திற்கு விருத்தமாக இவர் இவ்வுபநிஷத்தில் உரை எழுதியிருக்கிறார் என்று ஸித்திக்கின்றது.

தவிர விச்வதைஜஸப்ராக்ஞர்கள், பகவத் ரூபமென்ற ஸித்தாந்தமும் அஸங்கதந்தான். பிரபஞ்சமெல்லாம் பகவத்ரூபமாய் இருக்கும்போது இம்மூவரைமட்டிலும் பகவத்ரூபமாகக் கூறுவது மற்றவை பகவத்ரூபமன்றென்று அங்கீகரித்ததுபோலாகும். அனேகேசுவரவாதமும், ஸித்தித்துவிடும். அப்படியானால், **मायामात्रमिदं द्वैतं अद्वैतं परमार्थतः** என்ற வசனத்திற்கு ஏகேச்வரவாதத்தில் தாத்பரியம் வர்ணிப்பது இவர்களுக்கு அவசியமாகாது. விசுவாதிகளை பகவானுடைய அம்சமென்றால் பகவதபேதம் ஸித்திக்கமாட்டாது. ஆகவே பகவானைப்போல் விச்வாதிகளும் குணபூர்ணர்கள் என்று சொல்லமுடியாது. அன்றியும்.

कार्यकारणबद्धौ ताविष्येते विश्वतैजसौ ।

என்ற வசனத்தால் ; விச்வாதிகளுக்கு, ஸம்ஸாரபந்தம் உண்டென்றும், துரீயனான பகவானுக்கு ஸம்ஸாரபந்த மணுவளவுமில்லையென்றும், கூறியிருப்பது பூர்ணப்பிரக்ஞாசாரியாருக்குப் பொருத்தமில்லை. பகவானுடைய ரூபமாகிய விசுவாதிகளுக்கு பந்தஸம்பந்தம் எப்படி ஏற்படும்? அப்படியானால் பகவானுக்கும் பந்தஸம்பந்தம் அவசியம் வந்தேசேரும் ஆனால் மாத்வமதத்தில் நம்மைப்போல்ப் பகவானும் பந்தமுள்ளவரே யாவர். ஜீவர்களின் பந்தம் பகவத்ஸங்கல்பத்தால் விலகிவிடுமென்றாலும், தன் பந்தம் ஒருபோதும் விலகாது. பராதீனர்களாகிய ஜீவர்களுக்குப் பந்தமில்லையென்றுமேற்பட்டுவிடும். ஆகவே, மத்வமதத்தில் பகவான் ஸகல ஜீவராசிகளுடைய பந்தங்களுக்கு யஜமானனாயிருப்பதால் அவருக்குத்தான் பந்தம் ஜீவர்களுக்கு பந்தமில்லையென்று ஏற்படுவதால் பகவானைக்காட்டிலும், ஜீவர்களே மேலானவர்களாக ஆவார்கள்.

தவிர விசுவனுடைய ஸ்வரூப வர்ணனும் வெகு விசித்திரமா இருக்கிறது. एकोनविंशतिमुखः என்ற பதத்திற்கு (19) முக முள்ளவன் என்று அர்த்தமாம். அவற்றில் (18) முகம் புருஷ முகம் போன்றதாம். (19)வது முகமோ யானைமுகம்போன்றதாம் இவ்விதம் அர்த்தங் கூறுவதற்கு இவர் வசனந்தான் பிரமாணம். सप्तांग: என்ற பதத்திற்கும் கால் (2) தும்பிக்கை1 கை (4) ஆக (7) அங்கமுள்ளவனென்று அர்த்தமாம். அந்தோ? என்ன விந்தை? இதுவா வேதார்த்தம். இது காவ்யமல்லவே இப்படிப் பட்ட விசுவனுடைய உருவம் யாவருக்கும் பிரத்யக்ஷமாய்த் தெரியவேண்டியது அவசியமில்லையா? இல்லையென்றால். जागरितस्थान: என்ற விசேஷணம பிரயோஜனமற்றதாகும்.

அப்படியே वैश्वानर: என்ற பதவுரையும். முறையானதல்ல. नश्यतीति नर: என்றும் வித்பத்தி செய்திருப்பது ஸரியில்லை. வேதத்தில் ஏதோ சில விடங்களில் இவ்விதம் வ்யுத்பத்தி வர்ணிப் பது வழக்கமே யன்றி லோகத்திலல்ல. ஆனந்த தீர்த்தாசாரிய வசனம் வேதவசனமா? இவ்வாறு இவர் இவ்வுபனிஷத்தில் அனேகவிடத்தில் இப்படியே அர்த்தங்கூறியிருக்கிறார். அவற்றை எல்லாம் எடுத்துக்காட்டினால் விரிந்துவிடும் என்று பயந்து 2, 3. விடத்தில் மட்டும் எடுத்துக்காட்டினேன். (தொடரும்)

அத்வைதாபிமானி.

மனுஸ்மிருதி அத்தியாயம்—2.

சில வசனங்கள்.

---

1. வேதத்தில் தேர்ச்சியடைய, பிராமணனுக்கு ஐந்தாம் வயதிலும், யானை, குதிரை முதலிய ராஜ்யபலத்தையோ சரீர பலத்தையோ அடைய க்ஷத்ரியனுக்கு ஆறாம்வயதிலும், கிருஷி, வர்த்தகம் முதலிய தொழிலில் மேன்மையடைய, வைசியனுக்கு எட்டாம்வயதிலும் உபநயனம் செய்யப்படவேண்டும்.

2. பிராமணனுக்கு பதினாறுவயது, க்ஷத்ரியனுக்கு இருபத் திரண்டுவயது. வைசியனுக்கு இருபத்திநான்கு வயது முடியும் வரையில் உபநயன காலம் உண்டு.

3. இப்படி அவ ,வர்களுக்குப குறித்த காலத்துக்குபிறகும் பிறகும் உபநயனம் ஆகாமலிருக்கும் இம்மூன்று ஜாதியார்களும் உபநயன சுத்தி அடையாதவிராத்யர்கள் என்று பெரியவர்களால் தள்ளப்படுகிறார்கள்.

4. இப்ப்டிப்பட்ட அசுத்தர்களுடன் விதிப்படி பிராயச் சித்தம் ஏற்படாவிடில் எக்காலத்திலும் எந்த ஆபத்திலும் வேதாத்யயநமோ, கன்னிகாதானமோ எவ்வித சம்பந்தத்தையும் பிராமணன் செய்யக்கூடாது.

5. ஆயுளை இச்சிக்கிறவன் கிழக்கு முகமாயும் கீர்த்தியை இச்சிக்கிறவன் தெற்கு முகமாயும் பொருளை இச்சிக்கிறவன் மேற்குமுகமாயும் உண்மையை இச்சிக்கிறவன் வடக்குமுகமாயும் இருந்து சாப்பிடவேண்டும்.

6. பிராமண, க்ஷத்ரிய, வைசியாள் எப்பொழுதும் ஆச மனம் செய்துவிட்டு மனதை வேறுவிஷயத்தில் செலுத்தாமல் சாப்பிடவேண்டும். சாப்பாட்டுக்குப் பிறகும் ஆசமனம் செய்ய வேண்டும். அப்போது கண், காது, மூக்கு. வாய், முதலான பாகங்களையும் ஜலத்தினால் சுத்தம்செய்யவேண்டும்.

7. எப்பொழுதும் தன் ஆகாரத்தை தெய்வமாகப் நினைத்து அலக்ஷ்யம்செய்யாமல் சாப்பிடவேண்டும். அன்னத்தைப் பார்த்த உடன் சந்தோஷம் அடையவேண்டும். முகமலர்ச்சியுடன் தனக்கு ஆகாரம் எப்பொழுதும் கிடைக்க பிரார்த்திக்கவேண்டும்.

8. மேற்சொல்லியபடி பூஜிக்கப்பட்ட அன்னம் பலத்தை யும் வீர்யத்தையும் கொடுக்கும். பூஜிக்கப்படாத அன்னம் இவ் விரண்டையும் கெடுக்கும்.

9. தான்சாப்பிட்டபிறகு மிகுதியை ஒருவனுக்கும் கொடுக் கக்கூடாது. பகல், இரவு சாப்பாட்டுக்கு நடுவிலும் போஜனம் செய்யக் கூடாது. அளவுக்கு மிஞ்சியும் சாப்பிடக் கூடாது. சாப்பிட்டபிறகு வாய் கையை சுத்தி செய்யாமல் ஓரிடமும் போகக்கூடாது.

10. அளவுக்குமிஞ்சி சாப்பிடுவது வியாதியையும் மரணத் தையும், ஸ்வர்க்கத்துக்குறிய யாகம் முதலான நல்ல காரியத் திற்கு இடையூறையும், சாப்பாட்டையே தேடும் பாவத்தையும், ஜனங்களின் விரோதத்தையும் உண்டுபண்ணும். ஆகையால் அளவுக்குமிஞ்சி சாப்பிடக்கூடாது. R. ஸ்வாமிநாதய்யர்.

சிறுவருக்கான சிறுகதைக்கொத்து.

திருதராஷ்டரரும் பாண்டுவும்.

1. விசித்ரவீர்யன் முதல்மனைவி அம்பிகை. பீஷ்மர்சொன்னபடி சர்ஸ்திரத்தை ஒட்டி ஓர் ரிஷிமூலமாக இவளிடம் குழந்தையை உண்டுபண்ணவேண்டுமென்று ஸத்யவதி ஆசைகொண்டாள். தான் கன்னிகையாக இருந்தபோது பாராசரமுனிவரால் தன்னிடம் உண்டானவர் வ்யாஸர். ஆதலால் அவரைக்கொண்டு குழந்தையைப்பெற்றால் நல்லதல்லவா? என்று ஸத்யவதீ சொன்னதும் பீஷ்மர் தலைமேல் கைகூப்பி வணங்கினார். ஏன்? வியாஸர் அவதாரமல்லவா?

2. ஸத்யவதி அவரை நினைத்தாள். உடனே வந்துவிட்டார் வியாஸர். பகவானுடைய அவதாரமானாலும், வேதத்தைப் பிரித்தவானாலும் பதினெட்டு புராணங்களை எழுதினவானாலும் தாயை தெய்வமாக எண்ணி அவள் உத்திரவிற்கு இணங்கி வ்யாஸர் ஓடிவந்தார். வந்தவுடன் தாயை நமஸகரித்தார். என்ன செய்யவேண்டும் அம்மா? என்றார். ஸத்யவதி புத்ரனைக்கண்டு ஸந்தோஷித்தாள்.

3. அம்பிகையினிடம் நீ ஓர் குழந்தையை உண்டுபண்ண வேண்டும் என்றாள். அதற்கு அவர் ஒரு ஆக்ஷேபமும் சொல்லவில்லை. அப்படியே ஆகட்டும். ஆனால் என் வேஷத்தைக்கண்டு அவள் அருவருக்காமல் இருக்கவேண்டும் என்றார். ஸத்யவதி மருமகளை அழைத்து பாதி ராத்ரியில் வ்யாஸர் வருவார். ஜாக்ரதையாக இருந்து நல்ல குழந்தையைப் பெற்றுக்கொள் என்றாள்.

4, ராஜாவீட்டுப் பெண்ணானதால் ரிஷியின் வேஷத்தையும் நாற்றத்தையும் ஸஹிக்காமல் அவள் கண்ணை மூடிக்கொண்டாள். உடனே வெளியில்வந்த வ்யாஸரைப்பார்த்து தாய் நல்லகுழந்தை பிறக்குமா? என்று கேட்டாள். தாயே! பதினாயிரம் யானை பலமுள்ள ஓர் நல்லகுழந்தை பிறக்கும். அதற்கு நூறுபிள்ளைகளும் பிறக்கும்ஆனால் தாயின்குற்றத்தால் அதற்கு கண் இராதுஎன்றார்.

5. குருடனைக்கொண்டு எப்படி ராஜ்யத்தை ஆளுவது? அம்பாலிகையினிடத்தில் இன்னுமொரு குழந்தையைப் பெற்றுக்

கொடு என்று ஸத்யவதி சொன்னாள். தாயின் வார்த்தையைத் தட்டாமல் முன்போலவே ராத்ரி வருகிறேன் என்று சொல்லி மறைந்தார். ஸத்யவதி அம்பாலிகையை அழைத்து, ஸுகத்தை அநுபவிக்க அவரிடம் உன்னை அனுப்பவில்லை. ஆகையால் பக்தி ச்ரத்தையுடனிரு என்றுபதேசித்தாள்.

6. அர்த்தராத்ரியில் அரண்மனைக்கு வ்யாஸர்வந்தார். அவர் தேஜஸையும் ஜடையையும் வேஷத்தையும் பார்த்து அவளும் அருவருத்தாள். அவள் உடல் துக்கத்தால் வெளுத்தது. ஸத்யவதி வ்யாஸரைப்பார்த்து அப்பா! இப்போதாவது நல்ல குழந்தைபிறக்குமா? என்றாள். அவர் அம்மா! நல்ல பிள்ளைபிறக்கும் அவனுக்கும் சூரரான ஐந்து பிள்ளைகள் பிறப்பார்கள். ஆனால் தாய் தோஷத்தால் குழந்தை வெளுப்பாக இருக்கும்.

7. அதற்கு பாண்டு என்றே பெயர்வை. என்று சொல்லி மறைந்தார். இவ்விரண்டு குழந்தைகளுக்கும் தாய்ஜாதகர்மம் நாமகரணம் முதலியவைகளைச்செய்து வைத்தாள். குழந்தைகள் வளர்ந்தன. தக்கவயதில் உபநயநம்செய்து வேதசாஸ்திரம் யானை ஏற்றம் குதிரையேற்றம் அஸ்த்ர சாஸ்த்ரம் முதலியவைகளைக் கற்றுவைத்தாள். பீஷ்மர் ஸஹாயத்தால் இது எல்லாம் நடந்தன.

8. வயது வந்ததும் மூத்தவனாதலால் த்ருதராஷ்ட்ரனுக்கு ராஜ்யபட்டாபிஷேகம் செய்துவைத்தார்கள். மஹாபலமுள்ள பாண்டுவைச் சேனாபதியாகச்செய்தார்கள். கண்ணில்லாதவன் ராஜ்யத்தை ஆளமுடியுமா? அதனால் பாண்டுவே அரசனானான். அவர்கள் ஆளுகையில் ராஜ்யம் ஸுபிக்ஷமாக இருந்தது. குடிகள் ஸந்தோஷமாக வாழ்ந்தனர்.

9. பீஷ்மர் எல்லோரையுங்கலந்து யோசித்து ஸுபலனெனும் காந்தாரதேசத்து அரசன்பெண்ணான காந்தாரியை த்ருஷ்டரனுக்காகக் கேட்டனுப்பினர். குருடனுக்கா பெண்ணைக்கொடுப்பது? என அவன் கொஞ்சம் யோஜித்தான். பிறகு குலம் சீலம் முதலியவைகளை யோஜித்து அந்த அரசன் காந்தாரியை ஸஹோதரனான சகுனியுடன் கூட்டியனுப்பினான்.

10. காந்தாரி கண்ணில்லாதவனைத் தான் அவமதிக்கக் கூடுமோ? என்று பயந்தாள். தன் கண்ணைத் துணியால் கட்

டிக்கொண்டாள். இதிப்படி இவ்விருவருக்கும் கல்யாணம் நடந்தது. காந்தாரி ஸஹோதரியான ஸத்யவ்ரதை முதலிய பத்து பெண்களையும் மற்றும் சில ராஜகன்யைகளையும் அவருக்கு விவாஹம் செய்துவைத்தார்கள். பாண்டுவுக்கு போஜராஜன் பெண்ணான குந்தியையும் மத்ரராஜன் ஸஹோதரியான மாத்ரியையும் மணம்செய்தனர்.

வாரவிருத்தாந்தம்.

வித்யாவிகாஸினீ 21வ திருவையார் ஸம்ஸ்கிருத கலாசாலையில் ஷிஸபையின் ஆண்டுவிழா நடைபெற்றது. பெரும்பாலும் ஸம்ஸ்கிருதத்திலேயே வ்யவஹாரங்கள் நடந்தன. முற்கால கல்விமுறையைப்பற்றி தக்க வித்வான் ஒருவர் பேசினர். வாக்யார்த்தங்கள் நடைபெற்றன. இந்த கீர்வாணபாஷாபிமானத்தைக் கொண்டாடுகிறோம். இந்த வித்யைக்கேற்றபடி ஸதாசாரம் முதலியவைகளைக் கொள்வாராயின் படித்ததற்குப் பயன் உண்டு. பரீக்ஷையில் தேறுவதே புருஷார்த்தமல்ல என்று மாணவர் அறியவேண்டும்.

அபிஷேகமும் ஆராதனையும். 21வ கோயம்புத்தூருக்கடுத்த மருதமலைமீது கோவில்கொண்டிருக்கும் குமாரக் கடவுளுக்குக் கோயம்புத்தூர் நகரவாஸிகள் பால் பஞ்சாமிருதம் விபூதி முதலிய அபிஷேகங்களைச் செய்து வைத்தனர். மலைமீதே நூற்றுக் கணக்கான வேதியர்களுக்கு ஸமாராதனை நடந்தது. இங்ஙனம் ஆண்டுதோறும் நடைபெறுகிறது. வயிற்றுக்கு உணவு அளிப்பதோடு நிற்காமல் செவிக்கும் பகவத் கதாமிருதத்தை உணவாக அளித்தால் நல்லது.

த்வாதசியன்று மாற்றுவரா? காசி ஹநுமத் கட்டத்தில் ஸ்ரீ அன்னபூர்ணாகங்காஸமாஜத்தார் ப்ரதி ஏகாதசியிலும் அன்னதானம்செய்யத் தீர்மானித்து 18வ பல அங்க ஹீனர்களுக்கு அன்னமளித்தனர். மற்ற இடங்களில் செய்தால் ஒருபங்கு பலம் வருவதானால் அதே தர்மத்தைக் காசியில் செய்தால் ஆயிரம் மடங்கு பலன் உண்டென தர்மநூல்கள் சொல்கின்றன. அன்னதானத்திற்குப் பசியுள்ளவரோ பாத்ரமாதலால் ஏழைகளாய் பிச்சை எடுக்கக்கூட வெளியில் செல்ல முடியாதவர்களாயுள்ள அங்க

ஹீனர்களுக்கு அன்னம் அளிப்பது மிக உயர்ந்த தர்மமே. ஏகாதசியன்று உண்பதும் உணவளிப்பதும் பாபமாதலின் த்வாதசி தினம் இதைச்செய்து அதிக பயனை அடைவாராக.

அன்னதாத: ஸுபீபவ. 21உ தாராபுரத்தில் ஸ்ரீமான் ராஜா கே. சேதுமாதவ செட்டியார் அவர்கள் விவேகாநந்த தினத்தை உத்தேசித்து 1000 ஏழைகளுக்கு அன்னமளித்தார். நிமித்தம் எதுவானாலும் தானம் அதிலும் அன்னதானம் மிகச் சிறந்த தர்மமாகும். பல புண்யங்களைச் செய்து வைகுண்டம் சென்ற ஓரரசன் அன்னதானம் செய்யாததால் பசியால் மெலிந்து பூமியில்வந்து தன் சவஉடலை வெட்டித்தின்றான் என புராணங் கூறுகிறது. ஆதலால்தான் நித்ய தரித்ரர்களுக்கும்கூட ஆதித்யத்தை நித்யகர்மாவாக கர்மநூல்கூறிற்று. தாதா வாழ்க,

நல்லதைக் கொண்டாடுவோம். 26உ சேலம் நகரபரிபாலன ஸபை கூடிற்று. ஸ்ரீமதி மாதவி அம்மாள் தலைச்சேரி மேஜிஸ்ட்ரேட் ஓர் பெண்ணின் தாலியைக் கழற்றும்படி செய்ததையும், அதை அரசாங்கம் நன்றாகக் கண்டிக்காமலிருந்ததையும், கண்டித்து ஓர் தீர்மானம்கொண்டுவந்தாள். அது நிறைவேறியது. இந்த மதாபிமானச் செயலை ஆமோதிக்கிறோமானாலும் பெண்கள் புருஷர்கள் கூடும் ஸபையில் கலந்துக்கொள்வதைக் கண்டிக்காமல் இருக்கமுடியாது.

ஸித்தாஞ்ஜந லாபம்! 28உ சென்னை ஸ்ரீசங்கர மடத்தில் ஓர் பொதுக்கூட்டம் கூடியது. அச்சமயம் வேதசாஸ்த்ர விசக்ஷணர்களான பிரும்மஸ்ரீ ஸதாசாரநிதி ! அக்நிஹோத்ரம்தாத தேசிக தாதாசார்ய ஸ்வாமிகளையும் அக்நிஹோத்ரம் ராமாநுஜ தாதாசார்யஸ்வாமிகளையும் கொண்டாடி பலர் பேசினர். வேத லக்ஷணஸித்தாஞ்ஜநத்தையளித்து ஞானக்கண்ணைத்திறந்த இவ் வித்வன்மணிகளை வாழ்த்தி தங்களாலானவரை புத்தகத்தை வாங்கியோ, நன்கொடை அளித்தோ, இந்தலோகோபகாரமான கார்யத்தில் பாகம் எடுத்துக்கொள்வதென தீர்மானித்தனர். மற்ற வைதிக ஆஸ்திகமஹா ஜனங்களையும், இதேபோல் அவர்களுக்கு உபகாரம் செய்யும்படி வேண்டிய தீர்மானமும் நிறைவேறியது.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.